ஏராளமான தவறான நடவடிக்கைகள் அங்கு நடந்ததால்தான் அது கலைக்கப்பட்டது. அவற்றையெல்லாம் விசாரணை செய்து உரிய நடவடிக்கை எடுத்து இன்றைக்கு அந்த வங்கியைத் தொடங்கச் செய்திருக்கிறோம். இதுகுறித்து வேறு ஏதாவது அறிய விரும்பினால், தனியாக என்னிடத்தில் எழுதிக் கொடுத்தால் அதுகுறித்து நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஞா. ஜாண் ஜோசப்.

திரு. ஞா. ஜாண் ஜோசப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபோல என்னுடைய தொகுதிக்குட்பட்ட எண் 926-விளவங்கோடு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் கடந்த மார்ச் மாதம் 31 ஆம் தேதி 13 நபர்களிடத்தில் விவசாயக் கடனுக்கான மனுக்கள் பெறப்பட்டு சுமார் 8 மாத காலமாகியும், இதுவரையில் அந்தக் கடன்கள் வழங்கப்படாத நிலை உள்ளது. அவர்களுக்குக் கடன் வழங்கிட இந்தத் துறை நடவடிக்கை எடுக்குமா என்பதையும் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கான நடவடிக்கையினை எடுத்துக்கொண்டு வருகிறோம் என்பதை ஆரம்பத்திலேயே சொல்லியிருக்கிறேன். இப்போதும் சொல்கிறேன். அதற்கான துரிதமான நடவடிக்கையினை எடுத்திட நாங்கள் தயாராக இருக்கிறோம். இதிலே வேறு ஏதாவது சந்தேகங்கள் இருந்தால் அதுகுறித்து என்னிடத்தில் தனியாக எழுதிக் கொடுத்தால் அதனையும் சேர்த்து நடவடிக்கையினை விரைவுபடுத்துகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 23, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

23—

வேளாண்மை

***43411—திரு. அ. தமிழரசு:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2008 நவம்பர் 13]

தொழில் வளர்ச்சிக்கு இணையாக வேளாண்மை வளர்ச்சிக்கும் உரிய திட்டமிடுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். தமிழக விவசாயிகளின் வாழ்க்கைத் தரம் உயருவதற்கும், சமூக, பொருளாதார நிலையை மேம்படுத்தவும், பதினோராவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 4 சதவிகித வேளாண்மை வளர்ச்சியடையவும் அரசு பல்வேறு திட்டங்களை மேற்கொண்டுள்ளது. பயிர் இழப்பீட்டிலிருந்து விவசாயிகளைப் பாதுகாக்க பயிர்க் காப்பீட்டுத் திட்டம், உணவு உற்பத்தியை உயர்த்த தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டம், வேளாண் மற்றும் சார்புடைய பிற தொழில்கள்மூலம் வருமானம் பெருகிட தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டம் (N.A.D.P.), பண்ணை மகளிர் வேளாண்மை சார்பு சுயதொழில் மேற்கொண்டு பொருளாதார மேம்பாடு அடைவதற்கான திட்டங்கள், சிக்கன நீர் சாகுபடிமூலம் சாகுபடிப் பரப்பினை அதிகரித்து உற்பத்தியை உயர்த்த நுண்ணீர் பாசனத் திட்டம், செம்மை நெல் சாகுபடித் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்கள் வகுக்கப்பட்டு தொழில் வளர்ச்சிக்கு இணையாக வேளாண்மை வளர்ச்சியடைய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

முற்பகல் 9-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு.

திரு. அ. தமிழரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது இந்தியப் பிரதமர் அவர்கள், பொருளாதார வளர்ச்சி மையத்தின் பொன் விழாவில் கலந்துகொண்டு பேசியபோது, விவசாயமும், தொழிலும் சமச் சீராக வளர்ச்சி அடைய வேண்டும்; நமது நாட்டில் மூன்றில் இரண்டு பங்கு மக்கள் விவசாயத்தை நம்பி உள்ளனர்; எனவே, இவர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்து அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் சக்தி விவசாயத்திற்குக் கிடையாது; அதனால் கிராமப்புறங்களில் விவசாயம் சார்ந்த வேலைவாய்ப்புகளை, வேளாண் சார்ந்த தொழில்களைத் தொடங்கி ஊக்குவித்து, அதன்மூலம் வேலைவாய்ப்புகளை உருவாக்கி விவசாயத் துறையை நவீனப்படுத்தும் முயற்சியை முனைப்புடன் செய்ய வேண்டுமெனக் கூறியுள்ளார்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

எனவே, நமது அரசு, தொழில் வளர்ச்சிக்கு இணையாக வேளாண் வளர்ச்சிக்கு. அமைச்சர் அவர்கள் சொன்னதைவிட, கூடுதலாக மேலும் ஏதாவது புதிய திட்டம் வைத்துள்ளதா என்று தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசினுடைய வழிகாட்டுதலின்பேரில்தான், பதினோராவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் வேளாண்மை 4% வளர்ச்சியடைய, மத்திய அரசும், மாநில அரசும் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. வேளாண் உற்பத்தியைப் பெருக்க செயல்படுத்தப்படும் திட்டங்களுடன், வேளாண் இயந்திரங்கள் மற்றும் நுண்ணீர்ப் பாசனக் கருவிகளைத் தயாரிக்கும் தொழிற்சாலைகள் அமைத்தல், உணவு பதப்படுத்தும் மையங்கள் அமைத்தல், விற்பனை முனையங்கள் அமைத்தல், குளிரூட்டுதல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் போன்ற வேளாண் தொடர்புடைய தொழிற்சாலைகளை ஒருங்கிணைக்க, தமிழக அரசு வேளாண் தொழிற்கொள்கையை வகுத்துள்ளது. அதன்படி தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படும் நிலம், மின்சாரம், விற்பனை வரி, குடிநீர் போன்றவை தொடர்பான சலுகைகளும், மானியமும், வேளாண் தொழில்களுக்கும் வழங்கப்படும். தமிழக அரசு வேளாண்மையை ஒரு தொழிலாக அறிவிக்க வேண்டுமென்று முடிவெடுத்து, நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலின்பேரில், இந்தியாவிலேயே, முதலில் வேளாண்மையை ஒரு தொழில் என்று அறிவித்து, அந்தக் கொள்கையின் அடிப்படையில் உணவுப் பதனிடுதலை 1 சதவிகிதத்திலிருந்து 10 சதவிகிதமாக உயர்த்தவும், மதிப்புக் கூட்டுதலை 7 சதவிகிதத்திலிருந்து 30 சதவிகிதமாக உயர்த்தவும், உலக வணிகத்தில் வேளாண் பொருட்கள் மற்றும் வேளாண்மைப் பங்குகளைத் தொழில் ரீதியாக அதிக அளவில் உயர்த்தவும், சாகுபடிமூலம் செய்யப்படும் வேளாண் விளைபொருட்களில் வீணாகும் 20 சதவிகிதப் பொருட்களைப் பாதுகாத்துப் பதப்படுத்தவும் மற்றும் தற்போதுள்ள வேளாண் தொடர்புடைய தொழிற்சாலைத் தொகுப்புகளை ஒருங்கிணைக்கவும், தொழில் கொள்கை வகுக்கப்பட்டுள்ளது. ஆகவே, இந்த வேளாண் தொழில் கொள்கையைப் பயன்படுத்தி விவசாயப் பெருமக்கள் பயனடைவதற்கு நிறைய வாய்ப்புகள் இருக்கின்றன; பயன்படுத்திக் கொள்ளலாம்.

2008 நவம்பர் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு.

திரு. அ. தமிழரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய விவசாய விளைபொருட்கள் விலை நிர்ணயக் குழு கரும்புக்கு ஒரு டன்னுக்கு விலை ரூ.1,550 எனப் பரிந்துரை செய்துள்ளது. உத்தரப் பிரதேச அரசு ரூ.1,450 என ஒரு டன்னுக்கு விலை வழங்குவதாக அறிவித்துள்ளது. எனவே, நமது அரசும், தேசிய விவசாய விளைபொருட்கள் விலை நிர்ணயக் குழு அறிவித்துள்ளவாறு ரூ.1,500 என ஒரு டன்னுக்கு வழங்கவும்—மேலும், விவசாயத்தை ஒரு தொழிலாக அறிவித்து, அதற்கான ஒரு தொழில் கொள்கை வகுக்கப்பட்டிருப்பதாக நம்முடைய அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்—விவசாயத்தை ஒரு தொழிலாக அங்கீகரிக்கவும், நமது அரசு முன்வருமா எனத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-45

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பதிலிலேயே வேளாண்மை தொழில் கொள்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு அறிவிக்கப்பட்டிருக்கிறது என்று அறிவித்திருக்கின்றேன். மத்திய அரசால் வேளாண்மை விளைபொருட்கள் விலை நிர்ணயக் குழு ஒன்று அமைக்கப்பட்டு. அந்தக் குழு ஒரு டன் கரும்புக்கு 1,550 ரூபாய் வழங்கலாம் என்று பரிந்துரை செய்திருக்கிறது. ஆனால், மத்திய அரசு 2008-2009 ஆம் ஆண்டுக்கு 9 சதவிகித கட்டுமானத்திற்கு 811 ரூபாய் 80 காசுதான் வழங்கப்படும் என்று திட்டவட்டமாக அறிவித்திருக்கிறது. இதற்கு மேலும் பதில் வேண்டுமானால், தனிக் கேள்வி போடவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சந்திரகாசி.

திரு. மா. சந்திரகாசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் பெரம்பலூர் மாவட்டத்தில் சிறப்புப் பொருளாதார மண்டலம், M.R.F. Tyre Company மற்றும் மருத்துவக் கல்லூரிக்கு என மாவட்டத்தில் உள்ள நான்கில் ஒரு பகுதி நிலம் கையகப்படுத்தப்பட்டு, அந்த நிலங்களெல்லாம் வானம் பார்த்த பூமியாக, திட்டங்களைச் செயல்படுத்த முடியாமல் இருக்கின்றன. எனவே, மேற்கண்ட எங்கள் மாவட்டத்தில் அங்குள்ள விவசாயப் பெருமக்கள் விவசாயம் செய்வதற்கு—விவசாயத்திற்கு வேண்டிய மூலப் பொருள்களைக்

கொண்டு, விவசாய உணவு உற்பத்தி செய்வதற்கு—வேளாண்மைத் துறைமூலம் வேறு ஏதாவது மாற்றுத் திட்டம் கொண்டு வர அரசிடம் கருத்துரு உள்ளதா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும், அவர் எழுப்புகின்ற வினாவிற்கும் தொடர்பு இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் தரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 24, மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம், மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

24—

தூர் வாருதல்

***3555—திரு. வை. சிவபுண்ணியம்:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மன்னார்குடி தொகுதிக்குட்பட்ட திருமேனி ஏரியைத் தூர் வார அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருமேனி ஏரியைத் தூர் வாரி, கட்டுமானங்களைப் புனரமைக்க ரூபாய் 275 இலட்சத்திற்கு ஒரு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. திட்ட உருவாக்கம் (Planning and Design) Chief Engineer அவர்களுடைய பார்வைக்குச் சென்றிருக்கிறது. அதில் அவர்கள் சில கேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள். விளக்கத்திற்காக மீண்டும் திருச்சி மண்டலத்தினுடைய தலைமைப் பொறியாளருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. வந்ததற்குப் பிறகு, அதற்கு நிருவாக அனுமதி வாங்கி, பிறகு டெண்டர் விட்டு, அந்த வேலை எடுத்துக்கொள்ளப்படும்.